# இன்று புனித சனி

*திருவழிபாட்டு ஆண்டு B (04-04-2015)*

### *திருப்பலி முன்னுரை - 1*

இறைமகன் இயேசுவில் அன்பு நிறை அருட்தந்தை! (அருட்தந்தையர்களே) அன்பு நிறை சகோதர்களே! சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் வணக்கம். நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக் கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக. இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று புனித சனி. திருவிழிப்பு வழிபாட்டிற்காக ஒன்று கூடியுள்ளோம்.

தொடக்கத்திலிருந்தே இறைவன் தன் வாக்குறுதிகளை நிறைவேற்றும் நோக்கோடு தனது மக்கள் மத்தியில் செயற்படுத்திய அவரின் வியத்தகு செயல்களை நாம் இன்று நினைவு கூருகின்றோம். அடிமைத்தன வாழ்விலிருந்த மக்களை அற்புதமாக இறைவன் மீட்ட செயல் நமக்கு புதிய நம்பிக்கையை ஊட்டுவதாய் அமைகின்றது. இருளிலிருந்து ஒளிக்கும், சாவிலிருந்த வாழ்வுக்கும் இறைவன் நம்மை அழைத்துச் செல்கிறார். முழுமையான விடுதலை இறைவனிடமிருந்தே வருகின்றது. இந்த உண்மைகளை இன்றைய நாள் நமக்கு ஆழமாக எடுத்துக்கூறுகின்றது. உயிர்ப்பின் மகிமையில் நாமும் பங்குபெற அழைக்கப்படுகின்றோம் என்பதை உணர்ந்து பெரு மகிழ்ச்சியுடனும், நன்றி உணர்வுடனும் பாஸ்காத் திருவிழிப்பு சடங்கினில் பங்கேற்போம்.

### திருப்பலி முன்னுரை ~ 2

நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக் கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக. அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று புனித சனி.

நம் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பை இன்று நாம் நினைவு கூருகின்றோம். தமது திருப்பாடுகளாலும், சிலுவை மரணத்தாலும் பாவத்தை அழித்து மரணத்தை முறியடித்தவர் மாபரன் இயேசுக் கிறிஸ்து. இறைவனின் மகிமையை எதிர்த்து நிற்கவோ, தடுத்தூப் பார்க்கவோ எந்தச் சக்தியாலும் முடியாது என்பதைத்தான் இயேசுவின் உயிர்ப்பு நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இந்த உயிர்ப்பின் மகிமையில் நாமும் பங்குபெற அழைக்கப்படுகின்றோம் என்பதை உணர்ந்து பெரு மகிழ்ச்சியுடனும், நன்றி உணர்வுடனும் பாஸ்காத் திருவிழிப்பு சடங்கினில் பங்கேற்போம்.

## திருப்பலி முன்னுரை ~ 3

சாவை வீழ்த்தி வெற்றி கிடைக்க சரித்திர நாயகன் இயேசு, உயிர்க்கப் போகும் உன்னத இரவு இன்று: நாம் அனைவரும் கூடியிருக்கும் ஆண்டவரின் பாஸ்கா திருவிழிப்பு, பாஸ்கா என்றாலே கடந்து போதல் என்று பொருள். சாவைக்கடந்து உயிர்ப்பை பெற்ற இயேசுவைப் போன்று, செங்கடலை கடந்து, அடிமைவாழ்வை ஒழித்து வாக்களிக்கப்பட்ட வளமான கானான் நாட்டிற்கு இஸ்ராயேல் மக்கள் கடந்து சென்றது போன்று நாமும் நம்முடைய பாவ இயல்புகளை களைந்து, பழைய வாழ்வை மறந்து இயேசுவின் அன்பைப் பெற்ற புதியமக்களாக, உயிர்ப்பு பெற்று வாழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுகின்றது. பாவத்திலிருந்து புனித வாழ்விற்கு அடிமைத்தனத்திலிருந்து இயேசுவின் ஒளியிலும் வாழ்வதற்கு தேவையான வரங்கள் வேண்டி இன்றைய திருவிழிப்பு சடங்கிலே பங்கேற்போம்.

## திருப்பலி முன்னுரை ~ 4

ஆண்டவரே உம் ஆவியை அனுப்பி, மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர். அன்புமிக்க சகோதர சகோதரிகளே! தம் திருமகன் இயேசுவை உயிர்ப்பித்து நமக்கு வாழ்வு தரும் நம் இறைவனின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள். இன்று புனித சனி திருவிழிப்பு. இயேசுவின் உயிர்ப்பை நினைவு கூர்ந்து மகிழும் நன்நாள். இஸ்ரயேல் மக்களை இருளின் உறவிலிருந்தும் மரணத்தின் பிடியிலிருந்தும், அடிமைத்தனத்தின் ஆதிக்கத்திலிருந்தும் மோசே விடுவிக்க இறைவனின் பாஸ்காவை கொண்டிடாடி ~ செங் கடல் வழியாக நடத்தி பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டிற்கு கூட்டிச் சென்றார். ஒளியின் பாதையிலும் மேகத்தூணின் வழிநடத்தலிலும் நடந்து சென்று அந்த காணான் நாட்டை உரிமையாக்கினார்கள். இன்னும் பாவ இருளில் இருந்தும் சாவின் பிடியிலிருந்தும் விடுவிக்க இயேசு இறந்து உயிர்த்த இந்த இரவு இலட்சிய கனவுகளுக்கு சாவில்லை என்று உணர்த்துகிறது. உரிமைகளும் சுதந்திரங்களும் உயிர்பெற்று எழும் நேரம் வந்துவிட்டது. சாவே உன் கொடுக்கு எங்கே என்று வெற்றி வேந்தனாய் உயிர்த்த எம்பெருமான் இயேசுவின் இலட்சியம் நிறைவேறியது போல நாமும் நமது இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு சாவிலிருந்து வாழ்வுக்கும், அநீதியிலிருந்து உண்மைக்கும், பொய்மையிலிருந்து மெய்மைக்கும் அழைத்துச் செல்ல இயேசு உயிர்த்தார், நாமும் உயிர் பெறுவோம். இதில் முழுமையாகப் பங்கெடுத்து இறைவன் இயேசுவின் உயிர்ப்பில் புதுவாழ்வைத் தொடங்குவோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**உயிரளிக்கும் உடனிருப்பே எம் இறைவா!**

எம் தாய் திருச்சபையை உம் கையில் அர்ப்பணிக்கிறோம். முழுவிடுதலையை நோக்கி பயணமாகும் திருச்சபை புத்துயிர் பெற்ற புதிய எருசலேம் திருநகராக திகழ்ந்து உலகிற்கு ஒளியாய் திகழவும். திருச்சபை வழிகாட்டிகள் அனைவரும் உம் திருவுளத்தின்படி அன்பையும், நீதியையும் சமாதானத்தையும் இப்புவியில் பரப்பிட எங்களை வழிநடத்த எம் தலைவர்களுக்கு வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உலகின் பேரொளியே இறைவா!**

சாவை வென்று வெற்றி வீரராய் நீர் பவனி வந்ததை போன்று, நாங்களும் துன்பங்களைக் கண்டு துவண்டுவிடாமல் இருக்கவும், சோதனைகளைக் கண்டு கண்ணீர் வடிக்காமல் அவற்றைத் துணிவோடு போராடி வெற்றிகொள்ளவும் வரம் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உலகின் ஒளியே இறைவா!**

பாஸ்கா என்றாலே கடத்தல் என்பதை உணர்ந்து, எங்களது பழைய பாவ இயல்புகளில் இருந்து கடந்து உம் அன்பின் சிறகுகளுக்குள் தஞ்சம் அடையவும், நம்பிக்கை அன்பு, அருள் போன்ற பாஸ்கா விழாவின் கனிகளை நிரம்ப பெற்று வாழ்ந்திடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உலகின் மீட்பரே எம் இறைவா!**

உயிர்ப்பின் பாஸ்கா பலியை கொண்டாடும் உம் பிள்ளைகள் எங்கள் ஒவ்வொருவரையும் நீர் நிறைவாக ஆசீர்வதியும். உமது உயிர்ப்பின் ஒளியால் வளமான எதிர்காலத்தையும், ஆசீர்வாதத்தையும் பெற்று வாழ்வில் வெற்றி பெற இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**

உலகெங்கும் மனித மாண்புக்கு எதிரான அநீதியான அடக்குமுறைகள் அகற்றப்படவும், எல்லா மனிதர்களும் எவ்வித பாகுபாடுமின்றி மதிக்கப்படவும், அனைவரும் முழுமையான மகிழ்ச்சியைப் பெற்றிடவும் ஆட்சியாளர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்படவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**

நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.